DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 15/2024

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வேந்திரன் | Father/Husband Name | : அழகப்பன் |
| Age | : | Calling | : |
| Date | : 26.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 26 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிகள் ஆஜர்**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது எ.வள்ளாலபட்டியில் குடியிருந்து கொண்டு ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி, சரஸ்வதி, உமா, நெடுஞ்செழியன் ஆகியோர்களை தெரியும், ஆஜர் எதிரிகளை தெரியும். சுமார் 10, 15 வருடத்திற்கு முன்பு எனது ஆட்டுகடாய் காவலுக்கு இருந்து விட்டு மறுநாள் வந்தபோது எதிரி உமாபதிக்கும், சாட்சி செழியனுக்கும் சண்டை என பேசிக்கொண்டார்கள். வேறு இவ்வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**அரசுதரப்பில் அசா2 யை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிகோரப்பட்டு அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

ஆஜர் எதிரிகள் அஇஅதிமுக கட்சியை சேர்ந்தவர்கள் என்றும், சாட்சி சரஸ்வதி, சரஸ்வதி கணவர் வெள்ளையன் திமுக கட்சியை சேர்ந்தவர்கள் என்றும், சாட்சி சரஸ்வதி மற்றும் அவரது கணவர், ஓட்டுக்கு பணம் கொடுக்க முயன்றவர்களை அடித்து காயப்படுத்தும் நோக்கத்தோடு வீட்டிற்குள் 04.04.2011 ம் தேதி அதிகாலை 01.15 மணியளவில் நுழைந்து சாட்சி சரஸ்வதி மற்றும் சாட்சி நெடுஞ்செழியனையும் எதிரிகள் தாக்கி காயப்படுத்தினார்கள் எனவும், வீட்டின் பூட்டை சேதப்படுத்தினார்கள் எனவும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் எனவும்,

அதை நேரில் பார்த்தேன் எனவும் போலீசார் என்னை விசாரிக்கும்போது வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது ஆ ஜர் எதிரிகள் ஒரே ஊர்காரர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.